அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 8/2005

எனது இல.தா 7/3/1/31
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07,
2005. மார்ச் மாதம் 31 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

**தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவு 11 ஐ திருத்துதல்**
**சொத்துக்கடன்**

சொத்துக் கடன் வழங்குவதற்காக 2005 வரவு செலவுத்திட்டம் மூலம் பிரேரிக்கப்பட்ட வேலைத் திட்டத்தின் படி 2005.01.01 ஆந் திகதி முதல் பின்வரும் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

அதன்படி அரச அலுவலர்கள் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக காணி கொள்வனவு செய்தல்/ வீட்டுச் சொத்தினை உடைமையாக்கிக் கொள்ளல்/ வீடொன்றை நிர்மாணித்தல்/ வீடொன்றின் வேலைகளை முடிவுறுத்தல்/ தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து ஒரு சொத்தை உடைமையாக்கிக் கொள்ளல் என்பவற்றிற்காக கடன் வழங்குவதற்கு உரிய தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XXIV இன் பிரிவு 11 இன் ஏற்பாடுகளுக்குப் பதிலாக பின்வரும் ஏற்பாடுகள் 2005.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வண்ணம் பதிலீடு செய்யப்படுகின்றன.

11. வங்கிகள் மூலம் சொத்துக் கடன் வழங்கல்.

11.1 கடன் வழங்க முடியுமான விடயங்கள்

11:1:1 வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கான தகுந்த ஒரு காணியைக் கொள்வனவு செய்ய

11:1:2 கடன் விண்ணப்பதாரருக்குச் சொந்தமான ஒரு காணியில் புதிதாக ஒரு வீடு நிர்பாணிக்க.

11:1:3 வீட்டுடனான ஒரு காணியை/ மாடி வீடொன்றை கொள்வனவு செய்ய.

11:1:4 நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு வீட்டை திருத்தி அமைப்பதற்கும் புதிதாக ஒரு பிரிவை சேர்க்கவும்.

11:1:5 பகுதியாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு வீட்டின் மீதி வேலைகளை முடிவுறுத்த

11.2 தகைமைகள் :-

11:2:1 அரச சேவையை அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த ஒரு அலுவலராக இருத்தல் வேண்டும்.

11:2:2 ஓய்வூதிய/ பங்களிப்பு ஓய்வூதிய உரித்துடைய, 05 வருட சேவைக்காலத்துடன் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒரு அலுவலராக இருத்தல் வேண்டும்..

11:2:3 கணவரும் மனைவியுமாகிய இருவரும் அரச அலுவலர்கள் ஆயின் இருவரும் தனித்தனியாக கடன் பெற்றுக்கொள்ள தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டும். ஆயினும் ஒரே சொத்துக்காக இருவரும் கடன் பெறும் உரித்துக் கிடையாது.

*11:2:4* *ஓர் அரச கூட்டுத்தாபனத்தில்/ நியதிச்சட்டச் சபையில் சேவைபுரிவதற்காக தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள மேற் போந்த 11:2:1 மற்றும் 11:2:2 கீழ் தகுதிபெற்றுள்ள அலுவலர்களாக இருத்தல் வேண்டும்.*

*11:2:5* *இம்முறையின் கீழ் கடன் பெற்றுக் கொள்ளுதல் சேவைக்காலத்திற்குள் ஒரு தடவை மட்டுமாகும்.*

*11.3* ***கடன் அறவிடும் காலப்பகுதி***

*ஆகக் கூடிய காலம் 25 வருடங்கள் அல்லது அலுவலருக்கு 60 வயது பூர்த்தியாதல் ஆகிய இரண்டில் முன்னராக அமையும் காலத்திற்குள் முழு மொத்தக் கடனை தீர்த்துக் கொள்ளக் கூடியதாக மீள அறவிடும் காலப் பகுதியை தீர்மானிக்க வேண்டும்.*

*11.4* ***கடன் அளவு***

*11:4:1* *அலுவலரின் படிகள் அற்ற 05 வருட திரட்டிய சம்பளம் அல்லது பத்து இலட்சம் ரூபா ஆகிய இரண்டில் குறைந்த தொகையே அவரால் பெற்றுக் கொள்ள உரித்துடைய ஆகக் கூடிய தொகையாகும்.*

*11:4:2* *அரசின் பொறுப்பு இன்றி எவரேனும் ஓர் அலுவலருக்கு மேற்படி 11:4:1 வரையறைக்கு மேலதிகமாக கடன் பெற அவசியப்படுமாயின் வங்கியின் பொது நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடனை பெற்றுக் கொள்ள வங்கியுடனான இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.*

*11.5* ***வட்டி***

*11:5:1* *மேற்போந்த 11:4:1 பிரிவின் கீழ் பெற்றுக் கொள்கின்ற கடன் தொகைக்காக அலுவலரிடமிருந்து 4% சதவீத ஆண்டு வட்டி அறவிடப்படும்.*

*11:5:2* *மேற்போந்த 11:4:1 பிரிவின் கீழ் பெற்றுக் கொள்கின்ற கடன்களுக்கான வங்கியின் வட்டி விகிதத்திற்கும் அலுவலரிடமிருந்து அறவிடுகின்ற 4% வீத வட்டி விகிதத்திற்கும் இடையிலான வித்தியாசம் அரசினால் ஈடுசெய்யப்படும்.*

*11:5:3* *வட்டி கணிப்பிடப்படுவது தேய்மான கடன் மீது அடிப்படையில் ஆகும்.*

*11:5:4* *அலுவலர்களிடம் இருந்து அறவிடப்படும் கடன் தவணைக் கட்டணமும் மேற்படி 11:5:3 இன் கீழ் கணிப்பிடப்பட்ட 4% வீத வட்டி உள்ளடங்கிய மாத தவணைக் கட்டணமும் மொத்தக் கடனை*

செலுத்தி முடியும் வரை சமமான தவணைக் கட்டணங்களாக அறவிடப்பட வேண்டும்.

11.6 **பிணை**

மேற்போந்த 11:1 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்காக கடன் கோரும் சொத்துகளை வங்கியில் ஈடுவைக்க வேண்டும்.

11.7 **கடன் தவணைக் கட்டணங்களை அறவிடலும் பண அனுப்பீடும்**

11:7:1 அலுவலர் சேவையாற்றுகின்ற நிறுவனமானது வங்கியினால் பரிந்துரைத்த கடன் தவணைக்கட்டணம், அலுவலரின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படுகின்ற 4% வீத வட்டி மற்றும் அரசினால் ஈடுசெய்யப்படுகின்ற வட்டியை மாதாந்தம் உரிய வங்கிக்கு அனுப்பீடு செய்ய வேண்டும்.

11:7:2 அலுவலர் சார்பில் அரசினால் ஈடுசெய்யப்படுகின்ற வட்டி அளவினை அரசாங்கத்தின் செலவாக பொதுத் திறையின் ஆலோசனைகளின் பேரில் கணக்கில் வைக்க வேண்டும்.

11.8 **நிலுவை கடன் தவணைக் கட்டணங்கள்**

11:8:1 ஏதேனும் சேவையுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை காரணமாக அலுவலருக்கு சம்பளம் செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவர்கள் கடன் தவணைக் கட்டணம் அறவிடாமை பற்றி தொடர்புடைய வங்கியிடம் தாமதிக்காது அறிவிக்க வேண்டும்.

11:8:2 பதவி வெறிதாக்கலின் போது அல்லது சேவை நீக்கத்தின் போது கடன் மீதி தொடர்பில் வங்கியின் பொது ஒழுங்குகள் விதிகளை கையாளுதல் வேண்டும்.

11:8:3 பதவி வெறிதாக்கல், சேவை நீக்கம், பணித் தடை செய்தல் அல்லது சேவையிலிருந்து ஓய்வு பெறலின் போது கடன் விண்ணப்பதாரர் கடன் தவணைக் கட்டணங்களை வங்கியின் ஒழுங்குகள் விதிகளுக்கு அமைவாக அரசு ஈடுசெய்கின்ற வட்டியின் வித்தியாசத்தையும் உள்ளடக்கி தனிப்பட்ட முறையில் உரிய வங்கிக்கு செலுத்த வேண்டும்.

11:8:4 பணித் தடை செய்யப்பட்ட அலுவலரொருவர் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டால் பணித் தடை செய்யப்பட்டடிருந்த காலத்திற்குள் அலுவலரால் செலுத்தப்பட்ட தவணைக் கட்டணங்களுக்கு உரியதாக அரசு ஈடுசெய்கின்ற வட்டியை பின்வரும் நிபந்தனைகளின் கீழ் மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11:8:4:1 அலுவலர் மேல் தவறில்லை என அறிவித்து அவர் மீள் சேவையில் அமர்த்தப்பட்டால் அவரால் செலுத்தப்பட்ட தவணைக் கட்டணங்களில் உள்ளடங்கி அரசு ஈடுசெய்கின்ற வட்டி முழுவதுமாக அவரிடம் மீள்நிரப்பப்பட வேண்டும்.

11:8:4:2 அலுவலர் ஏதேனும் தண்டனைக்கு உட்பட்டு மீள் சேவையில் அமர்த்தப்பட்டால் தண்டனையின் தன்மையை கருதாது செலுத்தப்பட்ட தவணைக்

கட்டணங்களில் உள்ளடங்கிய அரசு ஈடு செய்கின்ற வட்டியின் அரைவாசி மட்டும் மீள் நிரப்பப்பட வேண்டும்.

11:8:5 கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் தொடர்பிலான தவணைக்கட்டணங்களையும் வட்டியையும் வழமையான முறையில் வங்கிக்கு அனுப்பீடு செய்ய வேண்டியதுடன் வட்டியின் வித்தியாசத்தை அரசு ஈடுசெய்யும்.

11:8:6 எவரேனுமொரு அலுவலருக்கு அரைச் சம்பளம் செலுத்தும் தறுவாயில் தவணைக் கட்டணத்தையும் வட்டியையும் அறவிடல் தொடர்பாக வங்கியின் பொது ஒழுங்குகள் விதிகளை கையாள வேண்டும்.

11:8:6:1 ஆயினும் பெண் அரச அலுவலரொருவர் பிரசவ விடுமுறையின் பேரில் அரைச் சம்பளம் பெறும் சந்தர்ப்பத்தில் தவணைக் கட்டணத்தையும் வட்டியையும் தனிப்பட்ட முறையில் வங்கிக்கு அனுப்ப வேண்டியதுடன் வட்டியின் வித்தியாசத்தை அரசு மீள் நிரப்பும்.

11:8:7 அலுவலர் ஒருவர் சம்பளமற்ற விடுமுறை பெற்றுக் கொள்ளும் போது தவணைக் கட்டணங்களையும் வட்டியையும் அறவிடல் தொடர்பாக வங்கியின் பொது ஒழுங்குகள், விதிகளை கையாள வேண்டும்.

11:8:8 சேவைக் காலத்திற்குள் அலுவலர் ஒருவர் மரணித்தால் அல்லது முழு வலது குறைவுக்கு ஆளானால் அத்தினத்தின் கடன் மீதியை கடன் பிணை முறி நிதியத்தின் மூலம் மாதாந்தம் வங்கிக்கு தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

11:8:9 ஓர் அரச கூட்டுத்தாபனத்தில்/ நியதிச் சட்ட முறையிலான சபையில்சேக்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள மேற்போந்த 11:2:4 இன் படி தகைமை அடைகின்ற அலுவலர் ஒருவரின் கடன் தவணைக் கட்டணங்களும் 4% சதவீத வட்டியும் அலுவலர் சேவையாற்றுகின்ற நிறுவனத்தால் வங்கிக்கு அனுப்பீடு செய்யப்படல் வேண்டும் என்பதுடன், அக் காலப் பகுதிக்கான வட்டி வித்தியாசம் தொடர்புடைய அலுவலர் இரண்டாம் நிலை நியமனம் பெற்றுள்ள நிறுவனத்தின் மூலம் அனுப்பீடு செய்யப்படும்.

11:8:9:1 ஓர் அரச கூட்டுத்தாபனத்தின்/ நியதிச் சட்ட முறையிலான சபையின் சேவைக்காக நிரந்தரமாக விடுவிக்கின்ற அலுவலர் ஒருவரின் கடன் தவணைக் கட்டணங்கள் மற்றும் வட்டி அறவிடல் தொடர்பாக வங்கியின் பொது நிபந்தனைகளை கையாளுதல் வேண்டும்.

*11:8:10* ஏதேனுமொரு காரணத்தால் அலுவலர் தற்கொலை செய்திருந்தால் உரிய கடன் அறவிடல் தொடர்பாக வங்கியில் ஒழுங்குகள் விதிகளை கையாள வேண்டும்.

*11.9* ***<u>கடன் விண்ணப்பங்களுடன் தொடர்பான முன்னேற்பாட்டுக் கட்டணம்.</u>***
அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கி மூலம் கடன் பெறுகையில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களான மதிப்பீட்டு அறிக்கை, சட்டத்தரணிக் கட்டணம், பிரயாணச் செலவுகள் அடங்கலான ஆகக் குறைந்த தொகை ரூபா. 7500/– அல்லது ஆகக் கூடியது கடன் தொகையில் 1% வீதம் ஆதல் வேண்டும்.

*11:9:1* கடன் விண்ணப்பங்களை வங்கியில் சமர்ப்பிக்கும் போது மேற்போந்த 11:9 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த தொகையை உரிய வங்கியில் வைப்பில் இட வேண்டும்.

*11:9:2* காணிப் பதிவு அலுவலகத்தில் இருந்து இருமடித்தாளக்களை பெற்றுக் கொள்ளல், உரித்தறிக்கைகளை பெற்றுக் கொள்ளல், நில அளவை, நிலப் படக் கட்டணம், அற்றோனித் தத்துவப் பதிவுக் கட்டணம், மற்றும் உரித்து உறுதிகளின் பிழைகள் இருந்தால் அவற்றை காப்புறுதி செய்வதற்காக ஆகும் செலவுகளை (மேற்போந்த 11:9:1 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேலதிக) அலுவலர் தனிப்பட்ட முறையில் செய்ய வேண்டும்.

*11.10* ***<u>சொத்துக்கடன் வழங்கும் பொது நிபந்தனைகள்</u>***

*11:10:1* அரசினால் ஈடு செய்யப்படுகின்ற வட்டியின் பேரில் அலுவலருக்கு வழங்க வேண்டிய கடன் தொகையை பரிந்துரைக்கும் போது அமைச்சு/ திணைக்களம் பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்ள வேண்டும்.

கடன் தொகையை பரிந்துரைக்கும் போது கவனயீனம் காரணமாக ஏற்படும் பிரச்சினைகளின் போதும் அரசுக்கு நேரும் நட்டங்களின் போதும் கடனை பரிந்துரைத்த அலுவலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நட்டம் அலுவலரிடமிருந்து அறவிடப்படும்.

*11:10:1:1* அலுவலரின் சம்பளத்தில் இருந்து குறித்து கடன் தொகையை கழிக்க முடியுமான ஆகக் கூடிய வரையறை 40% வீத வரையறையிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

*11:10:1:2* அலுவலரின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்ட பொறுப்புகளுடைய கழிப்புகளையும் வேறு கழிப்புகளையும் கவனத்திற் கொண்டு 11:10:1:1 பிரிவின் கீழ் ஆகக் கூடிய தொகையை வங்கியிடம் பரிந்துரைக்க வேண்டும்.

*11:10:2* எவரேனும் அலுவலர் ஒருவர் கடன் பெற்றுக் கொண்ட சேவை நிலையத்தில் இருந்து இடமாற்றம் பெற்றிருந்தால் அது பற்றி உரிய அமைச்சு/ திணைக்களம் கடன் பெறப்பட்ட வங்கிக்கு அறிவிக்க வேண்டியதுடன், 25 ஆம் பின்னிணைப்பிற்கு அமைவாக இடமாற்றம் பெற்ற இடத்திற்கு உரிய தகவல்களை வழங்க வேண்டும். இடமாற்றங்கள் காரணமாக தவணைக் கட்டணக்

கழிப்புகள் நிறுத்தப்படாதிருப்பதிலும் வங்கிகளுக்கு அனுப்பீடு செய்வதில் தாமதங்கள் ஏற்படாதிருப்பதிலும் நிறுவனத் தலைவர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும்.

11:10:3 கடன் வழங்குவதற்காக வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்ட அலுவலர் ஒருவர் குறித்த கடன் தொகையைப் பெற்றுக் கொள்ள முன் பணித் தடை செய்வதற்கு ஆளானால் அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்டால் அல்லது கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டால் கடன் தொகையை பெற முன் அத்தகைய நிலைமைகளைப் பற்றி தாமதிக்காது வங்கிக்கு அறிக்கையிடுவது நிறுவனத் தலைவரின் பொறுப்பாகும்.

11:10:4 கடன் பெற தகைமையுடைய அலுவலர் ஒருவர் பற்றி ஒரு திணைக்களம் அல்லது அமைச்சு வங்கிக்கு பரிந்துரைப்பது தாமதப்படுமாயின் அல்லது வங்கியிலிருந்து கடன் பெறும் போது அனாவசியமான தாமதங்கள் ஏற்படுமாயின் அது பற்றி பொதுத் திறைசேரியின் தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

11.11 <u>கடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்தலும் பரிந்துரைக்கும் வழிவகைகளும்</u>

11:11:1 கடன் விண்ணப்பதாரர் 26 ஆம் பின்னிணைப்பின் படி விண்ணப்பங்களை 3 பிரதிகளில் தயாரித்து திணைக்களத் தலைவர் ஊடாக அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

11:11:2 அமைச்சு, உரிய கடன் விண்ணப்பத்தை காத்திருப்போர் பதிவேட்டில் உள்ளடக்கி 11:10:1 ஆம் பிரிவின் படி வழங்க முடியுமான கடன் தொகையை தீர்மானித்து கடன் விண்ணப்பதாரரின் விருப்பப்படி ஒரு வாரத்திற்குள் உரிய வங்கிக்கு அனுப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

11:11:3 கடன் விண்ணப்பதாரர் உரிய கடன் தொகையை பெற்றுக் கொள்வதற்காக குறித்த வங்கியின் ஒழுங்குகள் விதிகளுக்கு உடன்பட்டு சுற்றறிக்கை மதியுரைகளுக்கு அமைவாக வேண்டிய தகவல்களை மூன்று மாத காலம் பூர்த்தியாக முன் வங்கிக்கு சமர்ப்பித்து கடன் தொகை அங்கீகரிக்கப்பட்ட பின் வங்கி அதுபற்றி அமைச்சுக்கு/ திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும்.

11:11:4 வங்கி கடன் தொகையை வழங்கிய பின் அதனை 27 ஆம் பின்னிணைப்பின் படி பொதுத் திறைசேரிக்கும் உரிய அமைச்சுக்கு/ திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும்.

11:11:5 அமைச்சினால் வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்ட ஒரு கடன் கோரலை மூன்று மாத காலங்களினுள் பெற்றுக் கொள்வதற்காக தேவைப்படும் தகவல்களை வங்கிக்கு வழங்கத் தவறும் சந்தர்ப்பத்தில் வங்கியினால் அவ்விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எக் காரணம் கொண்டும் இக் காலப் பகுதி நீடிக்கப்படாததுடன் அத்தகைய வேண்டுகோள்களும் புதிய வேண்டுகோளாக காத்திருப்போர் பதிவேட்டில் உள்ளடக்கப்படும்.

*11:11:6* *28 ஆம் பின்னிணைப்பின் படி பதியப்பட்டுள்ள வங்கிகளின் மூலம் மட்டும் இக் கடன் பெற்றுக் கொள்ள லாம்.*

*02.* *தாபன விதிக் கோவையின் அத்தியாயம்* XXIV *இன் பிரிவு 11 இன் ஏற்பாடுகள் மற்றும் அவ் ஏற்பாடுகளை திருத்தி 2004.12.31 ஆந் திகதி வரை வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் படி தற்போதைக்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை பாதியாதவாறு மேற்போந்த தாபன விதிக் கோவை திருத்தங்கள் பதிலீடு செய்யப்படுகின்றன.*

*03.* *2004.12.31 ஆந் திகதியில் அமைச்சுத் தலைவர்/ திணைக்களத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சொத்துக் கடன்களுள் வீடமைப்புகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் 2005 ஆண்டில் முன்வைக்கப்படும் விண்ணப்பங்களுள் வீடமைப்புகளுக்கான விண்ணப்பங்கள் தொடர்பில் மட்டும் இச்சுற்றறிக்கையின் படி 2005 ஆம் ஆண்டில் செயற்படுதல் வேண்டும்.*

ஒப்பம்/ டி.திசாநாயக்க,
செயலாளர்,
*அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.*

## பின்னிணைப்பு 25

அலுவலர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் செல்கையில் தவணைக் கட்டணங்களை அனுப்பீடு செய்தல் பற்றி இடம்மாறிச் செல்லும் அமைச்சுக்கு/ திணைக்களத்திற்கு அறிவித்தல் (பிரிவு 11:10:2)

எனது இல:-
............................அமைச்சு/ திணைக்களம்
............................................. அமைச்சில்/ திணைக்களத்தில் சேவையாற்றிய ........................(பதவி) திரு/ திருமதி/ செல்வி ............................................ ..................... திகதி தொடக்கம் .................................... அமைச்சுக்கு/ திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

அவரால் ...................................... வங்கியின் ........................ கிளையிலிருந்து பெற்றுள்ள ........................ ரூபா பணத் தொகை பற்றிய விபரம் பின்வருமாறு.

1. அலுவலரின் பெயர் :-
   கடன் உரித்து இல :-
   வங்கியின் தொடர் இல:-
   தற்போது செலுத்தி உள்ள தவணைக் கட்டணங்களின் அளவு :-
   மேலும் செலுத்த உள்ள தவணைக் கட்டணங்களின் அளவு :-
   இறுதி தவணைக் கட்டணத்தை செலுத்திய மாதம் :-
   காசோலை விபரம் :-

      காசோலை இல:-
      வங்கியும் கிளையும் :-
      காசோலை இல:-

2. 

| | | |
|---|---|---|
| கடன் தவணைக் கட்டணம் | :- | ரூபா. XXX |
| அதற்கான வட்டி (4%) | :- | ரூபா. XXX |
| அரசு ஈடு செய்யும் வட்டி வித்தியாசம் | :- | ரூபா. XXX |
| அனுப்பீடு செய்யப்பட்ட மொத்தத்தொகை | :- | ரூபா. XXX |

அமைச்சின் செயலாளர்/
திணைக்களத் தலைவர்
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி

பிரதி:- 1. முகாமையாளர் ...................................... வங்கி
........................................ கிளை,

2. ............................................... (அலுவலருக்கு)

## *பின்னிணைப்பு 26*

*கடன் கோரும் போது சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப் பத்திரம் (பிரிவு 11:11:1)*

*............................................ ஆன கடன் விண்ணப்பப் பத்திரம்*

1. அலுவலரின் முழுப் பெயர் :-
2. நிரந்தர பதவி :-(தற்போது இருக்கின்ற வகுப்பு / தரம்)
3. அடையாள அட்டை இல :-
4. நிரந்தர முகவரி :-
    1. தனிப்பட்ட:-
    2. அலுவலக :-
5. தொலைபேசி இல. :-
    1. தனிப்பட்ட :-
    2. அலுவலக :-
6. பிரிவு 11.1 இன் கீழ் கடன் கோரும் விடயம் :-
7. கோருகின்ற கடன் தொகை :-
8. இணைப்பு 4 இன் படி கடன் பெற எதிர்பார்க்கின்ற வங்கியும் வங்கிக் கிளையும் :-

*தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவின் கடன் தொகைக்கு உரிய ஏற்பாடுகளுக்கும் அதற்கமைய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் ஒழுங்குகள் விதிகளுக்கும் அமைவாக கடனை பெற்றுக் கொள்ள உடன்படுகிறேன்.*

.....................................

திகதி கடன் விண்ணப்பதாரர்

*.................................. (அமைச்சின்/ திணைக்களத்தின் ) தாபனப் பிரிவினால் பூர்த்தி செய்ய வேண்டும்.*

1. முதல் நியமனத் திகதி –
2. பிறந்த திகதி :-
3. (அ) ஓய்வூதியமுடைய நிரந்தர நியமனமா ?
   (ஆ) ஆமெனில் எத் திகதி முதல் ?
4. தற்போது அரசிடமிருந்து பெற்றுள்ள கடன்கள் பற்றிய விபரம் :-

| கடன் வகுதி | ................ ஆந் திகதி செலுத்த வேண்டிய கடன் நிலுவை |
|---|---|
| | |

5. *மாதச் சம்பள விபரம் :–*

| | | |
|---|---|---|
| **I.** | *மாதாந்த திரட்டிய சம்பளம் :– ……………………….* | **xxx** |
| **II.** | *படிகள் …………………………………………………….* | **xxx** |
| **III.** | *முழுச் சம்பளம் ………………………………………….* | **xxx** |
| IV. | *மொத்தக் கழிப்பனவுகள் (பொறுப்புகள் உடனான கழிப்பனவுகளுடன்) ……………………….* | **(xxx)** |
| **V.** | *தேறிய சம்பளம் ………………………………………….* <br> *(உரிய மாதத்தின் சம்பள விபரம் இணைக்கப்பட்டுள்ளது)* | **xxx** |
| VI. | *தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 11:4:1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி அலுவலருக்கு வழங்க முடியுமான ஆகக் கூடிய கடன் தொகை.* <br> *(இலக்கங்களில் ………………….. )* <br> *(எழுத்தில் …………………………. )* | |

6. *அலுவலருக்கு எதிராக தீர்க்கப்படாத துர் நடத்தை குற்றச் சாட்டு அல்லது தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகின்ற துர்நடத்தை குற்றச் சாட்டுகள் இருப்பின் அவை பற்றிய விபரங்கள் :–*

*திகதி :*

*பதவி நிலை அலுவலர்*
*(நிறுவனம்)*

## *திணைக்களத் தலைவரின் பரிந்துரை:–*

*எனது இல:*
*……………………………. (அமைச்சு/ திணைக்களம்)*

*……………………………. வதியும் திரு/ திருமதி/ செல்வி …………………………..க்கு அவரின் வேண்டுகோளனின்படி ………………………. (விடயம்) ஆக மாதச் சம்பளத்தில் இருந்து கழிக்கக் கூடியதான தொகையை, உரித்துடைய ஆகக் கூடிய கடன் தொகையுடன் வங்கி பரிந்துரைப்படி கடன் தொகையை வழங்கலாமென பரிந்துரைக்கின்றேன்.*

…………………………….
*கையொப்பம்*
*பெயர் :–*
*பதவி :–*
*உத்தியோகபூருவ முத்திரை.*

*அமைச்சுச் செயலாளரின் பரிந்துரை :–*
*எனது இல:–*
*அமைச்சு :–*
*முகாமையாளர் :–*
*..................... வங்கி*
*..................... கிளை*

*அரசினால் வழங்கப்படுகின்ற சலுகை வட்டியின் பேரில் திரு/ திருமதி/ செல்வி ............................................ க்கு மேற்படி திணைக்களத் தலைவரின் பரிந்துரையின் கீழ் வங்கி பரிந்துரைக்கின்ற சொத்துக் கடன் வழங்குவதை அங்கீகரிக்கின்றேன்.*

*அதே போன்று வங்கி பரிந்துரைக்கின்ற படி அவரின் சம்பளத்தில் இருந்து வங்கியினால் கணிக்கப்படும் தவணைக் கட்டணம் 4% வீத வட்டி, அத்துடன் அலுவலரிடம் இருந்து அறவிட வேண்டிய மாத தவணைக் கட்டணம் மற்றும் அத் தவணைக் கட்டணத்தில் உள்ளடங்கும் அரசு ஈடு செய்கின்ற வட்டியை தவணைக் கட்டணத்துடன் 11:7:1 ஆம் பிரிவின் கீழ் வங்கிக்கு அனுப்பீடு செய்ய உடன்படுகிறேன்.*

*கையொப்பம் :–*
*பெயர் :–*
*பதவி :–*
*(உத்தியோக பூருவ முத்திரை)*

## பின்னிணைப்பு 27

வங்கியினால் கடன் தொகை வழங்கப்பட்டது பற்றி உரிய அமைச்சுக்கு/ திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டிய விதம். (பிரிவு 11:11:4)

............................................. (அமைச்சு செயலாளர்/ திணைக்களத் தலைவர்)
............................................. (அமைச்சு/ திணைக்களம்)

................................................ அவர்களின் கடன் பணத்தை வழங்குதல்

1. வங்கியினதும் வங்கிக் கிளையினதும் பெயர் :-
2. கடன் உரித்து இல :-
3. கடன் பெறுநரின் முழுப் பெயர் :-
4. முகவரி :- தனிப்பட்ட:-
   அலுவலக :-

5. அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை ரூபா............... (இலக்கத்தில்)
   ரூபா ............ (எழுத்தில்)
6. கடன் பணம் அங்கீகரிக்கப்பட்ட திகதி :-
7. கடனை அறவிடும் காலப் பகுதி :-
   2005 ஆண்டு இருந்து 200 ......... வரை

8. மாத தவணைக் கட்டணம் :-
   8.1 4% வட்டியுடன் தவணைக் கட்டணத்தின் பெறுமதி ரூபா .................
   8.2 செலுத்த வேண்டிய மொத்த தவணைக் கட்டணங்களின் அளவு :........

திகதி :-

.....................................
முகாமையாளர்
முகாமையாளரின் பெயர்
உத்தியோகபூருவ முத்திரை

பிரதிகள் :- 1. பணிப்பாளர் நாயகம்,
தேசிய வரவு செலவுத் திணைக்களம்,
பொதுத் திறைசேரி,
கொழும்பு - 01.

2. ........................................ அமைச்சு

## பின்னிணைப்பு 28

*கடன் பெற்றுக் கொள்ளக் கூடியதான வங்கிகளின் பெயர் பட்டியல் (பிரிவு 11:11:6)*

1. மக்கள் வங்கி
2. இலங்கை வங்கி
3. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
4. தேசிய சேமிப்பு வங்கி
5. கொமர்ஷல் வங்கி
6. என்.டி.பி. வீடமைப்பு கம்பெனி
7. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.